டிரஸ்ட் ஆரம்பித்திட...
புதிதாக டிரஸ்ட், பவுண்டேஷன், கட்சி, ஆசிரமம், சங்கம், மன்றம், கழகம் பதிவு செய்திட தொடர்பு கொள்ளவும்.
பகவான் பவுண்டேஷன்
96004 02096

நல்லவே எண்ணல் வேண்டும்... எண்ணிய முடிதல் வேண்டும்...

# சக்கர வியூகம்

தினசரி நாளிதழ் "தேமதுரத் தமிழோசை உலகமெலாம்" DAILY NEWS PAPER
★SAKKRA VIYUGAM★

இணையத்தில் வாசிக்க..,

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 139 13.11.2025 THURSDAY IPPASI : 26 PRICE : RS.5/-
மலர் : 01 இதழ் : 139 13.11.2025 வியாழக்கிழமை ஐப்பசி : 26 விலை : ரூ.5/-

3 முத்தரையர்கள் அதிகார மீட்பு மாநாடு வெற்றி மாநாடாக அமைய பாடுபட வேண்டும் : கே.கே.செல்வகுமார் பேச்சு

4 போலி வாக்காளர்கள் ஓட்டுப் போட்டுத்தான் கொளத்தூரில் ஸ்டாலின் ஜெயித்தாரா? நிர்மலா சீதாராமன் கேள்வி

2 கோரிப்பாளையம் மற்றும் அப்பல்லோ ஆகிய சந்திப்புகளில் மேம்பாலம் கட்டப்பட்டு வரும் பணிகளை அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு

# UPSC முதன்மைத் தேர்வு முடிவு வெளியீடு : தொடர்ந்து சாதிக்கும் 'நான் முதல்வன்' திட்ட மாணவர்கள்!



சென்னை, நவ.13-

UPSC முதன்மைத் தேர்வில், தமிழ்நாடு அரசுப் பயிற்சி மையங்களில் பயின்ற 87 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற UPSC முதன்மை தேர்வு முடிவுகள் வெளியாகியுள்ளது. இதில் தமிழ்நாட்டில் இருந்து தேர்வு எழுதியவர்களில் 155 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

தமிழ்நாட்டில் கடந்த ஆண்டு 136 பேர் தேர்ச்சி பெற்ற நிலையில், இந்த ஆண்டு 155 பேர் வெற்றி பெற்றுள்ளனர். கடந்த ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு தமிழ்நாடு அரசுப் பயிற்சி மையங்களில் பயின்ற மாணவர்களின் தேர்ச்சி விகிதம் 77.08 சதவீதமாக உயர்ந்துள்ளது.

தமிழ்நாடு அரசுப் பயிற்சி மையங்களில் பயிற்சி பெற்று கடந்த 35.29% மாணவர்கள் UPSC தேர்வில் வெற்றி பெற்ற நிலையில், இந்த ஆண்டு 54.84%ஆக அதிகரித்துள்ளது.

இந்நிலையில், UPSC தேர்வில் வெற்றி பெற்றுள்ளவர்களுக்கு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதள பதிவில், UPSC முதன்மை தேர்வு முடிவில் தமிழ்நாடு பிரகாசிக்கிறது.

தமிழ்நாட்டைச் சேர்ந்த 155 பேர் UPSC முதன்மைத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளனர்.முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தொலைநோக்கு திட்டமான 'நான் முதல்வன்' திட்டத்தில் பயின்ற 87 பேர் UPSC முதன்மை தேர்வில் வெற்றி வெற்றி பெற்றுள்ளது மிகுந்த பெருமையாக உள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் மாநிலத்தில் இருந்து 100 அரசு ஊழியர்களை உருவாக்கும் நமது இலக்கை நோக்கிய பயணம் தொடர்ந்து முன்னேற்றத்தை அடைந்து வருகிறது" என தெரிவித்துள்ளார்.



■ தேனி மாவட்டம், தேக்கடியில் அருள்மிகு சபரிமலை ஐய்யப்பன் கோயிலுக்கு கார்த்திகை முதல்நாள் முதல் மகரஜோதி வரை வழிபாட்டுக்கு செல்லும் பக்தர்களின் பாதுகாப்பு மற்றும் அடிப்படை வசதிகள் குறித்த முன்னேற்பாடு ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ரஞ்ஜீத் சிங் மற்றும் இடுக்கி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.தினேஷன் சேருவாட்,தலைமையில் நடைபெற்றது.

விளம்பரம் மற்றும் செய்திகள்
தொடர்புக்கு : 88705 00000

அழையுங்கள்! வாசகர்களே!!
தங்கள் பகுதிகளில் நடக்கும் தாங்கள் காணும் விரும்பத்தகாத செயல்கள், அவலங்கள், சட்டத்திற்கு புறம்பான செயல்பாடுகள், பெண்களுக்கு எதிரான கொடுமைகள் மற்றும் சமூகத்தில் நடக்கும் தங்களால் தட்டிக் கேட்க இயலாத அநீதிகளை எங்களுக்கு உடனுக்குடன் தெரியப்படுத்தவும். (ரகசியம் பாதுகாக்கப்படும்)
(24 x 7)
88705 00000
sakkraviyugam2025@gmail.com

## சித்தையன் கோட்டை பேரூராட்சி 2வது வார்டில் புதிய நியாய விலைக்கடையை ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் திறந்து வைத்து ரேஷன் பொருட்களை பயனாளிகளுக்கு வழங்கினார்

### புதிய நியாயவிலைக்கடை மூலம் 30 நாட்களும் ரேஷன் பொருட்களை பயனாளிகள் பெறலாம்

சின்னாளபட்டி, நவ.13

சித்தையன்கோட்டை பேரூராட்சி 2வது வார்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் கட்டப்பட்ட புதிய நியாய விலைக்கடையை ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் திறந்து வைத்து ரேஷன் பொருட்களை பயனாளிகளுக்கு வழங்கினார்.

திண்டுக்கல் மாவட்டம், சித்தையங்கோட்டை பேரூலீட்ராட்சிக்குட்பட்ட 2வது வார்டில் இஸ்லாமிய சமுதாய மக்கள் அதிகம் வசிக்கின்றனர். அப்பகுதியைச் சேர்ந்த பெண்கள் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களிடம் தங்கள் பகுதிக்கு புதிய நியாயவிலைக்கடை வேண்டுமென கோரிக்கை மனு கொடுத்தனர். உடனடியாக அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் ரூ. 8 லட்சம் ஒதுக்கீடு செய்து புதிய நியாயவிலைக்கடை கடை கட்ட உத்தரவிட்டார். புதிய நியாயவிலைக் கட்டிடப் பணிகள் முடிந்து அதன் திறப்பு விழா செவ்வாய் கிழமை மாலை 6.00 மணி அளவில் நடைபெற்றது. விழாவிற்கு கூட்டுறவு சங்கங்களின் துணைப் பதிவாளர் (பொது விநியோகம்) உஷா நந்தினி தலைமை தாங்கினார். பேரூராட்சி மன்ற தலைவர் போதும்பொண்ணு



முரளி, துணைத்தலைவர் ஜாகிர்உசேன், சிறுபான்மையினர் அணியைச் சேர்ந்த வழக்கறிஞர் செல்லமரக்காயர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். செயல் அலுவலர் ஜெயமாலு வரவேற்றார். சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட தி.மு.க. மாநில துணைப் பொதுச் செயலாளரும், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி அவர்கள், புதிய நியாயவிலைக்கடையை திறந்து வைத்து பயனாளிகளுக்கு ரேஷன் பொருட்களை வழங்கிவிட்டு பேசுகையில் இப்பகுதியில் முழுநேர புதிய நியாய விலைக்கடையை திறந்து வைத்ததன் மூலம் இப்பகுதியைச் சேர்ந்த பெண்கள் 30 நாட்களும் ரேஷன் பொருட்களை தங்குதடையின்றி பெறலாம் என்ற நிலை உருவாகியுள்ளது. சித்தையங்கோட்டை பேரூராட்சியைப் பொறுத்தவரை பொதுமக்களுக்கு வழங்கப்படும் குடிதண்ணீரில் தொடங்கி வடிகால் வசதி, சாலை வசதி, மின்விளக்கு வசதி உட்பட பல்வேறு நலத்திட்டப் பணிகள் 100 சதவீதம் நிறைவேற்றிக் கொடுக்கப்பட்டுள்ளது. அடித்தட்டு மக்கள் வசிக்கும் பகுதியில் 2 சமுதாயக் கூடங்கள் கட்டிக்கொடுக்கப்பட்டதால் அவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக உள்ளது. இதுதவிர இப்பகுதியைச் சேர்ந்த நெல் விவசாயிகளின் நலன் கருதி, நெல் கொள்முதல் நிலையங்கள் கொண்டுவரப்பட்டதால் நெல் விவசாயிகள் மிகவும் பயனடைந்து உள்ளனர் என்றார். நிகழ்ச்சியில் திமுக மாநில தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், ஒன்றிய செயலாளர் ராமன், மாவட்ட தி.மு.க. கு.சத்தியமூர்த்தி,

ஆத்தூர் வட்டாட்சியர் முத்துமுருகன், மண்டல துணை வட்டாட்சியர் பிரவீனா, முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் பாஸ்கரன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மணலூர் மணிகண்டன், கூட்டுறவு சாபர் பதிவாளர் அறிவழகன், கூட்டுறவு சங்க செயலாளர் கணேஷ்பாபு, ஆத்தூர் மேற்கு ஒன்றிய திமுக அவைத்தலைவர் காணிக்கை சாமி, பேரூராட்சி மன்றதலைவர் ரேகா அய்யப்பன், சித்தையன்கோட்டை பேரூராட்சி செயலாளர் சக்திவேல், பேரூராட்சி மன்ற முன்னாள் துணை தலைவர் தங்கபாண்டி முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் நாக லெட்சுமி சசிகுமார், திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஷ், பேரூராட்சி தலைமை எழுத்தர் கவின், வார்டு உறுப்பினர்கள் லாவண்யா சுரேஷ், தியாகு, பபிதா பானு, பேரூராட்சி துப்புரவு ஆய்வாளர் அபுபக்கர், குழாய் பொருத்துநர் ஜெயராஜ், கணிணி ஆப்ரேட்டர் பாலா, மற்றும் திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## திசையன்விளை வி.எஸ்.ஆர் மெட்ரிக் பள்ளியில் விளையாட்டு விழா

திசையன்விளை. நவ.13

திசையன்விளை வி. எஸ் .ஆர் .மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் விளையாட்டு விழா நடைபெற்றது. விழாவிற்கு பள்ளியின் தாளாளர் வி. எஸ் .ஆர். ஜெகதீஷ், இயக்குனர் சௌமியா ஜெகதீஷ் ஆகியோர் தலைமை ஏற்றனர். துணை முதல்வர் விஜயா தினகரன் வரவேற்புரை வழங்கி இவ்விழாவினை துவக்கி வைத்தார். விழாவில் சிறப்பு விருந்தினராக தேசிய கபடி விளையாட்டு வீரர்கள் சுதாகர் மற்றும் ஜெயசீலன் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர். விழாவில் மாணவர்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டு சிறப்பு விருந்தினர்கள் சுதாகர் மற்றும் ஜெயசீலன் சமாதான புறாவை பறக்கவிட்டு விழாவினை



தொடங்கி வைத்தார்கள். தொடர்ந்து மாணவர்களுக்கு இறுதி கட்ட விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றது. மேலும் மழலைச் செல்வங்களின் வண்ணமயமான உடற்கல்வி நடனங்கள் அனைவரையும் கவர்ந்தது. மாணவர்கள் தங்கள் தனித்திறமையை வெளிப்படுத்தும் வகையில் கராத்தே, யோகா, சிலம்பம் என்று பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றது .விழாவில் கலந்து கொண்ட பெற்றோர்களை ஊக்குவிக்கும் வகையில் பெற்றோர்களுக்கும் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டது.அதனைத் தொடர்ந்து பள்ளியின் 2025 26 ஆம் ஆண்டின் விளையாட்டிற்கான ஆண்டு அறிக்கை உடற்கல்வி ஆசிரியர் பெர்கினஸ் சேகர் வாசித்தார். தொடர்ந்து மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் ஆரம்பமானது. சிறப்பு விருந்தினர்கள் மாணவர்களின் படிப்பின் முக்கியத்துவத்தையும் விளையாட்டின் முக்கியத்துவத்தையும் எடுத்துக் கூறினர்.தொடர்ந்து மாநில மாவட்ட மண்டல அளவில் வெற்றி பெற்று பள்ளிக்கு பெருமை சேர்த்த மாணவர்களையும் பள்ளிஅளவில் நடைபெற்ற போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களையும் பாராட்டி கேடயமும் பதக்கங்களும் சிறப்பு விருந்தினர்களால் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியின் இறுதியில் பள்ளியின் தாளாளர் அனைத்து நிகழ்ச்சிகளையும் பாராட்டி நன்றியுரை வழங்கினார்.



## அலங்காநல்லூர் தனிச்சியம் நெல் கொள்முதல் நிலையங்களை சட்டமன்ற எதிர்க்கட்சி துணைத் தலைவர் உதயகுமார் நேரில் ஆய்வு

அலங்காநல்லூர், நவ.13-

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் ஒன்றியம் தனிச்சியம் பகுதியில் அரசு நெல் கொள்முதல் நிலையம் செயல்பட்டு வருகிறது நெல் கொள்முதல் நிலையங்களில் விவசாயிகள் தொடர்ந்து குற்றச்சாட்டு வைப்பதாக அரசியல் கட்சியினர் வேதனை தெரிவித்து வருகின்றனர். இந்த நிலையில் தனிச்சியம் நான்கு வழிச்சாலை பகுதியில் கொட்டி வைக்கப்பட்டிருந்த நெல் கொள்முதல் நிலையத்தை சட்டமன்ற எதிர்க்கட்சி துணை தலைவர் ஆர்.பி. உதயகுமார். நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து விவசாயிகளிடம் குறைகளை கேட்டறிந்தார் இது குறித்து அவர் செய்தியாளருக்கு அளித்த பேட்டியில் விவசாயிகள் பல்வேறு மாதங்களாக தங்களது விலை நிலத்தில் விவசாயம் செய்து நெல்மணிகளை அரசு நெல் கொள்முதல் மையங்களுக்கு எடுத்து வந்து விற்பனை செய்கின்றனர் ஆனால் இந்த மையங்களில் விவசாயிகளிடம் கமிஷனாக பணத்தைப் பெற்றுக் கொண்டு முட்டைக்கு சரியான விலை கொடுப்பது இல்லை இதுபோக விவசாயிகள் விலை நிலங்களில் அறுவடை செய்த நெல்மணிகளை மூட்டைகளைசரியான நேரத்தில் அனுப்பாமல் மழையிலும் அப்படியே போட்டு வைத்து முளைக்க வைத்து வீணாக்குவது அரசின் மெத்தன போக்கை காட்டுகிறது இதில் அரசு உடனே தலையிட்டு இப்பகுதியில் விவசாயிகள் அறுவடை செய்யும் நெல்லுக்கு சரியான விலையை கொடுத்து விவசாயிகளின் வாழ்வாதாரத்தை காக்க வேண்டும் என்று தெரிவித்தார். அருகில் ஒன்றிய செயலாளர்கள் கல்லணை ரவிச்சந்திரன், மதுரை மேற்கு தெற்கு அரியூர் ராதாகிருஷ்ணன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் கருப்பையா, மாணிக்கம், மாநில அம்மா பேரவை துணைச் செயலாளர் வாடிப்பட்டி ராஜேஷ்கண்ணா, மாவட்ட மகளிரணி செயலாளர் வக்கீல் லெட்சுமி ஒன்றிய துணைச் செயலாளர் சம்பத்,நகர பிரதிநிதி முரளி,சென்னை தொழிலதிபர் தர்மர்,உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## கோரிப்பாளையம் மற்றும் அப்பல்லோ ஆகிய சந்திப்புகளில் மேம்பாலம் கட்டப்பட்டு வரும் பணிகளை அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு

கோவை, நவ.13-

பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு துரை மாவட்டம், நெடுஞ் சாலை துறை சார்பில் கோரிப்பாளையம் மற்றும் அப்பல்லோ ஆகிய சந்திப்புகளில் மேம்பாலம் கட்டப்பட்டு வரும் பணிகளை ஆய்வு செய்து பார்வையிட்டார்.



இந்நிகழ்ச்சியில் பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தெரிவிக்கையில்:

கடந்த 10 ஆண்டு காலம் புறக்கணிக்கப்பட்ட தென் தமிழகத்தில் திராவிட மாடல் ஆட்சி அமைக்கப்பட்ட பின் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் புறக்கணிக்கப்பட்ட தென் தமிழகத்திற்கு முக்கியத்துவம் அளித்து நெடுஞ்சாலைத்துறைக்கு பல கோடி ரூபாய்கள் ஒதுக்கி திட்டப்பணிகளை மேற்கொள்ள உத்தரவிட்டார்கள். அந்த வகையில் திருநெல்வேலி மாவட்டத்தில் புறவழிச்சாலை அமைக்கும் பணியும், திருச்சியில் காவிரி மேம்பாலம் கூடுதலாக கட்டும் பணியும் மதுரை மாநகரில் 100 ஆண்டு கால பொதுமக்களின் கோரிக்கைகளை ஏற்று மதுரை மாவட்டம் நெடுஞ் சாலை துறை சார்பில் ரூபாய் 150 கோடி மதிப்பீட்டில் 2100 மீட்டர் நீளத்தில் அப்பலோ சந்திப்பு மேம்பாலமும், ரூபாய் 190 கோடி மதிப்பீட்டில் கோரிப்பாளையம் சந்திப்பில் 2100 மீட்டர் நீளத்தில் மேம்பாலமும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு தற்பொழுது கட்டப்பணிகள் நடைபெற்று வருகிறது. இந்த மேம்பால பணிகள் எனது தலைமையில் 9 முறையும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் மாதம் ஒரு முறையும், தலைமை பொறியாளர் அவர்கள் தலைமையில் 15 நாட்களுக்கு ஒரு முறையும் ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

அப்பலோ சந்திப்பு மேம்பாலம் கட்டிடப்பணிகள் தற்பொழுது 97 சதவீதம் நிறைவடைந்துள்ளது. வர்ணம் பூசுதல், விளக்கு அமைத்தல் உள்ளிட்ட எஞ்சிய 3 சதவீத பணிகள் டிசம்பர் 1ஆம் தேதிக்குள் முடியும். இந்த மேம்பாலம் கட்டும் பணிகள் விரைவில் முடிக்கப்பட்டு அடுத்த மாதம் அதாவது டிசம்பர் 7ஆம் தேதி அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. கோரிப்பாளையம் சந்திப்பில் கட்டப்பட்டு வரும் மேம்பால பணிகள் தனியார் கல்லூரி நிர்வாகம் நில எடுப்பு தொடர்பாக நீதிமன்ற வழக்கு தொடர்ந்ததன் காரணமாக ஆறு மாதம் கால தாமதமானதால் பொங்கல் பண்டிகைக்கு முன்னர் திறந்து வைப்பதற்கு ஏதுவாக மேம்பால பணிகளை விரைவில் செய்து முடிக்க ஒப்பந்ததாரர்களுக்கு அறுவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் இப்பணிகளை விரைவில் முடிக்க மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை வாரம் ஒரு முறை பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்ய அறிவுறுத்தியுள்ளோம். நெடுஞ்சாலைத்துறையில் சாலைப் பாதுகாப்பு பிரிவு மற்றும் தரக் கட்டுப்பாட்டு பிரிவுகள் ஆய்வு செய்த பின்பு தான் கட்டிமுடிக்கப்பட்ட மேம்பாலம் பணிகள் பொதுமக்கள் பயன் பாட்டிற்கு திறந்து வைக்கப்படும். விபத்துக்களை தவிர்ப்பதற்காக கோயம்புத்தூரில் புதிதாக கட்டப்பட்டுள்ள மேம்பாலத்தில் உள்ள வளைவுகளில் பயன்படுத்திய ரோலர் க்ராஷ் பேரியர் (Roller crash Barrier) என்ற அமெரிக்க தொழில் நுட்பத்தை பயன்படுத்தியுள்ளோம். மேலும் தெற்குவாசல் மேம்பால பணிகளுக்கான சாத்திய ஆய்வுக்கூறுகள் ஆய்வு செய்யப்படுகிறது பின்னர் திட்ட மதிப்பீடு தயார் செய்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட பின் பணிகள் மேற்கொள்ளப்படும். மேம்பாலம் திறக்கப்பட்ட பின் எந்தப்பகுதியில் அதிக போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது, எந்தப்பகுதியில் அதிக விபத்து ஏற்படுகிறது என்பதை சாலை பாதுகாப்பு பிரிவு (Road Safty Wing) அலுவலர்களிடம் கலந்தாலோசித்து சுரங்கப்பாதை அமைக்கலாமா அல்லது ஏதாவது மேம்பாலம் அமைக்கலாமா என்று முடிவு செய்து அதற்கான பணிகளை செய்வோம் என மாண்புமிகு பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப., மதுரை வடக்கு சட்டமன்ற உறுப்பினர் கோ. தளபதி, மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் மு.பூமிநாதன் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## சம்பா, தாளடி நெற்பயிரில் ஆங்காங்கே குருத்து பூச்சி அதிக யூரியா, தழை சத்து உரம் போடக்கூடாது



திருத்துறைப்பூண்டி, நவ.13-

திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் தங்க பாண்டியன் கூறியிருப்பதாவது, திருத்துறைப்பூண்டி வட்டாரத்தில் தற்போது பயிரிடப்பட்டுள்ள சம்பா மற்றும் தாளடி நெற்பயிரில் ஆங்காங்கே குருத்து பூச்சி தாக்குதல் காணப்படுகிறது.

இப்பூச்சி தாக்குதலின் அறிகுறியாக நெற்பயிரின் நடுக்குருத்து காய்ந்து வைக்கோல் போல் மாறி விழும், கையினால் நடுப்பகுதியை பிடித்து இழுத்தால் இலகுவாக வருவதுடன் தண்டின் அடிப்பகுதியில் குருத்துபூழு சாப்பிட்ட அறிகுறி காணப்படும்.

நெற்பயிர்கள் வளர்ச்சி அடைந்து நெல்மணிகள் உருவாகும் போது வெள்ளை கதிர்கள் ஒரு சில இடங்களில் உருவாகும். இப்பூச்சி தாக்குதலைக் கட்டுப்படுத்த தேவைக்கு அதிகமாக யூரியா போன்ற தழைச்சத்து உரங்கள் இடுவதை குறைக்க வேண்டும். விளக்கு பொறி அமைத்து தாய் அந்து பூச்சிகளை கவர்ந்து கட்டுப்படுத்தலாம்.

பூச்சிதாக்குதல் ஆரம்ப நிலையில் இருந்தால் ஏக்கருக்கு 400மிலி குளோர்பைரிபாஸ் மருந்தினை 200லிட்டர் தண்ணீரில் கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம். பூச்சி தாக்குதல் சற்று அதிகமாக காணப்பட்டால் கார்டாப் ஹைட்ரோ குளோரைடு 50 சதவீதம் மருந்தினை ஏக்கருக்கு 400 கிராம் என்ற அளவில் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம்.இவ்வாறு அவர் கூறினார்.



## தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் திருச்சி மாவட்ட பொதுக்குழு கூட்டம்

திருச்சி, நவ.13-

தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் திருச்சிமாவட்ட பொதுக்குழு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, தில்லை நகரில் உள்ள கி.ஆ.பெ. விசுவநாதம் தொடக்கப் பள்ளியில், மாவட்ட தலைவர் சதீஷ்பாபு, தலைமையில், மாவட்டச் செயலாளர் கார்த்திகேயன் வரவேற்புரையாற்றி தொடங்கி வைத்தார்.

இந்த மாவட்ட பொதுக்குழுவில் மாநிலத் தலைவர் மகேந்திரகுமார், கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். மேலும் மாநில பொருளாளர் திலகர், மாநில துணைத்தலைவர்கள் பாபு, தமிழ்மொழி, மாநில செயலாளர்கள் லட்சுமி, ஆரோக்கியராஜ் ஆகியோரும். மேனாள் மாநில தலைவர் தண்டபாணி, கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர்.

இந்நிகழ்வில் திருவண்ணாமலை மாவட்ட தலைவர் அமாவாசை, திண்டுக்கல் மாவட்ட தலைவர் பார்த்தசாரதி, கடலூர் மாவட்ட தலைவர் அன்பழகன், திருப்பூர் மாவட்ட தலைவர் ஜெயராமன், ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நிகழ்ச்சியில் மேனாள் மாவட்டத் தலைவர் கலியமூர்த்தி உள்ளிட்ட தற்போதைய மாவட்ட நிர்வாகிகள், வட்டக் கிளை நிர்வாகிகள், இணைப்புச் சங்க நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் திரளாக கலந்து கொண்டு தங்கள் துறை சார்ந்த கோரிக்கைகளை மாநில தலைவரிடம் வழங்கினார்கள், மேலும் முக்கிய மூன்று முக்கிய தீர்மானங்கள் பழைய ஓய்வூதிய திட்டத்தை அமல்படுத்த வேண்டும் சத்துணவு அங்கன்வாடி ஊர் புற நூலகர்கள் டேங்க் ஆபரேட்டர்கள் மற்றும் பிறதுறைகளில் உள்ள சிறப்பு காலமுறை ஊதியம் பெறும் பணியாளர்கள் அனைவருக்கும் காலமுறை ஊதியம் வழங்க வேண்டும். மத்திய அரசு அறிவித்துள்ள மூன்று சதவிகித அகவிலைப்படியை மாநில அரசு உடனே வழங்க வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன,

இறுதியாக மாவட்ட பொருளாளர் ஆனந்த், நன்றியுரையாற்றினார்.



## தொடர் மழையால் குறுமிளகு விவசாயம் பாதிப்பு

பந்தலூர், நவ.13-

பந்தலூர் சுற்று வட்டாரப்பகுதியில் தொடர்மழையால் குறுமிளகு விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டம், பந்தலூர் மற்றும் கூடலூர் கேரளா மாநிலம் வயநாடு மாவட்டங்களில் தேயிலை, காப்பி செடிகளுக்கு இடையே சில்வர்வொக், பலா மரங்கள் மற்றும் காட்டு மரங்களில் குறுமிளகு கொடிகள் ஊடு பயிர்களாக வளக்கப்பட்டு விவசாயிகள் பயனடைந்து வந்தனர்.

மருத்துவ குணம் கொண்ட குறுமிளகு சமையல் உள்ளிட்ட பல்வேறு விதங்களில் பயன்படுகின்றது. கறிமுண்டா, வயநாடன், பன்னியூர் உள்ளிட்ட ரகங்கள் இப்பகுதியில் அதிக அளவில் பயிர் செய்து வருகின்றனர். இந்த ஆண்டு பருவமழை பருவம் தவறி பெய்ததால் குறுமிளகு செடிகள் காய்ந்தும், வாடல் நோய் உள்ளிட்ட நோய் தாக்கம் காரணமாக மகசூல் இல்லாமல் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

விவசாயிகளுக்கு தகுந்த ஆலோசனைகள் வழங்கி குறுமிளகு விவசாயிகளை ஊக்குவிப்பதற்கு துறை சார்ந்த அதிகாரிகள் நடவடிக்கை இல்லை என விவசாயிகள் கூறுகின்றனர்.எனவே இப்பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு உரிய ஆலோசனைகள் வழங்கி குறுமிளகு விவசாயிகளை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## நெல் ஈரப்பத அளவு தளர்வு குறித்து ஒன்றிய அரசு முடிவு எதுவும் தெரிவிக்காதது வஞ்சிக்கும் செயல்: தமிழக விவசாயிகள் கண்டனம்

சென்னை, நவ.13-

நெல் ஈரப்பத அளவு தளர்வு குறித்து ஒன்றிய அரசு முடிவு எதுவும் தெரிவிக்காதது விவசாயிகளை வஞ்சிக்கும் செயல் என கண்டனம் தெரிவித்துள்ளனர். வடகிழக்குப் பருவமழை காரணமாக அறுவடை செய்யப்பட்ட நெல் அதிக ஈரப்பதத்துடன் இருப்பதால், கொள்முதலுக்கான ஈரப்பத வரம்பை 17 சதவீதத்திலிருந்து 22 சதவீதமாக உயர்த்த வேண்டும் என தமிழ்நாடு அரசு ஒன்றிய அரசிடம் கோரிக்கை விடுத்தது.

முதலமைச்சர் கோரிக்கையை ஏற்று நெல் ஈரப்பதத்தை அக்.26, 27, 28ல் ஒன்றிய அரசின் தலா மூன்று குழுக்கள் நேரில் ஆய்வு செய்தது. தஞ்சை, திருவாரூர், மயிலாடுதுறை, நாகை மாவட்டங்களில் ஒன்றிய அரசு குழு ஆய்வு செய்தது. இந்த நிலையில், நெல் ஈரப்பதம் குறித்து ஒன்றிய அரசு குழு ஆய்வு செய்து 2 வாரமாகியும் இதுவரை எந்த அறிவிப்பும் வெளியிடப்படவில்லை என விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். ஒவ்வொரு ஆண்டும் விவசாயிகளை ஒன்றிய அரசு ஏமாற்றி வருவதாக விவசாயிகள் குற்றம் சாட்டினர்.

## புதிய தொழில்நுட்ப முறையில் திராட்சை பயிரிட்டு பயன் பெறலாம்

கிருஷ்ணகிரி, நவ.13-

புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்தி, திராட்சை பயிரிட்டு ஏற்றுமதி செய்து விவசாயிகள் பயனடைய வேண்டுமென கலெக்டர் அறிவுரை வழங்கியுள்ளார்.



கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டணம் ஊராட்சி ஒன்றியம், பையூரில் செயல்படும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம் சார்பில் வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் ஒருங்கிணைந்து, திராட்சை சாகுபடி தொழில்நுட்பப் பயிற்சி முகாமினை நடத்தியது.

இம்முகாமினை கலெக்டர் தினேஷ்குமார் தொடங்கி வைத்தார். மேலும், நவீன திராட்சை சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்த கையேட்டை வெளியிட்டு, கலெக்டர் பேசியதாவது:

கிருஷ்ணகிரி மாவட்டம், தோட்டக்கலைத்துறையில் பெயர்பெற்ற ஒரு மாவட்டம். பல்வேறு பயிர்களை சிறப்பாக பயிரிடக்கூடிய ஒரு சிறந்த மாவட்டமாகும். திராட்சை பயிரிட்டு ஏற்றுமதி செய்து பயன்பெறலாம். வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப்பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் ஒருங்கிணைந்து நடத்திய திராட்சை சாகுபடி தொழில்நுட்ப பயிற்சி வழங்கப்படுகிறது.

அதே போல், தமிழ்நாட்டிலேயே தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் திராட்சை அதிகம் பயிரிடப்படுகிறது. இதில் முக்கியமான பன்னீர் திராட்சை பயிரிடப்பட்டு கேரளாவிற்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

அந்த மாவட்டங்களில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்ப உதவியுடன், பையூர் தோட்டக்கலை மற்றும் ஆராய்ச்சி நிறுவன வளாகத்தில், ஒரு ஏக்கர் பரப்பளவில் மாதிரி திராட்சை சோதனை பண்ணை உருவாக்கப் பட்டுள்ளது. இதில், 11 வகையான திராட்சை ரக செடிகள் வைத்துள்ளனர். இந்தியாவில், திராட்சை ஏற்றுமதி மிகச் சிறப்பாக நடைபெற்று கொண்டிருக்கிறது.

திராட்சையை பொறுத்தவரை 16 எம்எம் இருந்தால் தான், அவை ஏற்றுமதிக்கு உகந்ததாகும். எனவே, கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் திராட்சை சாகுபடி குறித்த தொழில்நுட்பத்தை பயன்படுத்தி, திராட்சை பயிரிட்டு ஏற்றுமதி செய்து பயனடைய வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார். தொடர்ந்து, 11 வகையான திராட்சை ரகங்கள் செடி வளர்ப்பு பணிகளை பார்வையிட்டார். நிகழ்ச்சியில் தோட்டக்கலைத் துறை இணை இயக்குனர் இந்திரா, தோட்டக்கலைத்துறை அரசு கலைக்கல்லூரி முதல்வர் அனிதா ராணி, பிராந்திய மேலாளர் ஷோபனா குமார், பேராசிரியர்கள் செந்தமிழ் செல்வி, ஸ்ரீ வித்யா, திலகம், சுந்தரமூர்த்தி, கிருஷ்ண வேணி மற்றும் விவசாயிகள், தோட்டக்கலை கல்லூரி மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

## 19,908 பேர் ஆசிரியர் தகுதி தேர்வு எழுதுகின்றனர் முன்னேற்பாடு பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை

கடலூர், நவ.13-

கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், ஆசிரியர் தேர்வு வாரியத்தால் நடத்தப்படும் ஆசிரியர் தகுதி தேர்வு (TNTET I&II) நடைபெறவுள்ளதை முன்னிட்டு, முன்னேற்பாடு பணிகள் தொடர்பாக மாவட்ட ஆட்சியர் சிபி ஆதித்யா செந்தில்குமார் தலைமையில் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

அப்போது ஆட்சியர் கூறுகையில், ஆசிரியர் தேர்வு வாரியத்தினால் 2025ம் ஆண்டிற்கு ஆசிரியர் தகுதி தேர்விற்கான (TN-TET) தாள்1 தேர்வு வரும் 15ம் தேதி மற்றும் தாள் II தேர்வு 16ம் தேதி நடைபெறவுள்ளது. இத்தேர்விற்கான தாள்1ஐ மாவட்டத்தில் 65 தேர்வு மையங்களில் 19,908 தேர்வர்கள் தேர்வு எழுத உள்ளனர்.

தேர்வர்கள் தேர்வு மைய அனுமதி சீட்டுடன் தேர்வு மையத்திற்கு குறித்த நேரத்திற்குள், தங்களுடைய ஆதார் அட்டை, கடவுச்சீட்டு, ஓட்டுநர் உரிமம் ஆகியவற்றின் ஏதேனும் ஒன்றின் நகல் உடன் வருகைபுரிய வேண்டும். அனைத்து தேர்வு மையங்களிலும் கண்காணிப்பு கேமரா மூலம் தேர்வுகளை கண்காணிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

மேலும் தேர்வு மையங்களில் எவ்வித புகார்களுக்கும் இடமளிக்காத வகையில் பள்ளிக் கல்வித் துறை மூலம் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் தேர்வு நடைபெறும் நாட்களில் தடையில்லா மின்சாரம் வழங்கிடவும், மாணவர்கள் தேர்வு மையங்களுக்கு உரிய நேரத்தில் சென்றிட தேவையான போக்குவரத்து வசதி, மின்சாரம் சார்ந்த நடவடிக்கைகளை மேற் கொள்ள வருவாய் துறை, காவல்துறை, சுகாதாரத்துறை உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது, என்றார். இதில் மாவட்ட வருவாய் அலுவலர் ராஜசேகரன், துணை ஆட்சியர் டியுக் பார்க்கர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



# அய்யம்பட்டி ஊராட்சியில் 14 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட அங்கன்வாடி மையத்தினை முன்னாள் முதலமைச்சர் பன்னீர்செல்வம் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்

தேனி. நவ.13-

தேனி மாவட்டம் சின்னமனூர் அருகே உள்ள அய்யம்பட்டி ஊராட்சியில் போடிநாயக்கனூர் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 14 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட அங்கன்வாடி மையத்தினை முன்னாள் முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் திறந்து வைத்தார்.பின்னர் புது கட்டடத்தினை பார்வை யிட்டு ரிப்பன் வெட்டி குத்து விளக்கு ஏற்றி வைத்து திறந்து வைத்தார்.

அங்கன்வாடி மையத்தில் வைக்கப்பட்டுள்ள எம்ஜிஆர் ஜெயலலிதா படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

இந்திய நிகழ்வில் சின்னமனூர் ஒன்றிய செயலாளர் விமல் கிளைச் செயலாளர் மற்றும் நிர்வாகிகள் தொண்டர்களும் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.




# பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி திருமுருகன்பூண்டி நகராட்சி முன்பு பொதுமக்கள் ஆர்ப்பாட்டம்

திருப்பூர், நவ.13-

திருப்பூர் மாவட்டம் திருமுருகன்பூண்டி நகராட்சி பகுதி வாழ் பொதுமக்கள் பல்வேறு வகையான கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி நகராட்சி அலுவலகம் முன்பு மாரிமுத்து தலைமையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பின்வரும் கோரிக் கைகளை நிறைவேற்ற வேண்டுமென ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

1. திருமுருகன்பூண்டி நகர் பகுதி முழுவதும் நல்ல தண்ணீர் உப்பு தண்ணீர் பற்றாக்குறையை போக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

2. திருமுருகன் பூண்டி தேசிய நெடுஞ்சாலையில் உள்ள சோலார் மின் விளக்குகள் கடந்த ஒன்றரை வருடங்களாக எரிவதில்லை அதை சரி செய்யவும்

3. திருமுருகன் பூண்டி சிக்னல் அருகில் பைப் லைன் போடுவதற்காக தோண்டப்பட்ட பள்ளம் பலமுறை சரி செய்தும் இதுவரை அதன் மேல் பகுதியில் தார் ரோடு போடப்படவில்லை தார் ரோடு போடப்பட வேண்டும்.

4. நெசவாளர் காலனிக்கு நல்லாற்றின் ஓரம் பாதை அமைத்து கொடுத்து பயன்பாட்டில் இருந்த, பழைய பாதையை சரி செய்து மீட்டு தர வேண்டும்.5. பெருமாள் கோவில் அருகில் உள்ள ரோட்டை சரி செய்து தர வேண்டும் என கோரிக்கையில் முன் வைத்தனர்.

ஆர்ப்பாட்டத்தை மாரிமுத்து தலைமை ஏற்று நடத்தினார். உடன் சங்கர், நஞ்சப்பன், பாபு, அருணாச்சலம், பாலசுப்ரமணியன், ஈஸ்வரமூர்த்தி மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்




# கைரேகை கருவிழி மூலம் ரேஷன் பொருட்கள் வழங்குவதையும் ப்ளூடூத் முறையில் பொருட்கள் எடை போடுவதையும் மாற்றி பழைய முறையில் பொருட்கள் வழங்க வேண்டும்

## மாதர் சங்கம் கண்டன ஆர்ப்பாட்டம்

அவிநாசி, நவ.13-

அவிநாசி ஒன்றியம் முழுவதும் உள்ள ரேஷன் கடைகளில் கைரேகை கருவிழி மூலம் பொருட்கள் வழங்குவதும் ப்ளூடூத் முறையில் பொருட்களை எடை போடுவதும் ஒரு அட்டைக்கு குறைந்தது 15 நிமிடத்திற்கு மேல் ஆவதால் மக்களை பல்வேறு வகையில் பாதிப்பை ஏற்படுத்துகிறது இதனால் கிராமப்புறங்களில் வாழும் பொதுமக்கள் காலை பொருட்கள் வாங்குவதற்கு வந்தால் மாலை வரை காத்திருந்து பொருட்கள் வாங்கும் நிலை உள்ளது. இது ஏழை எளிய குறிப்பாக பெண்களின் ஒரு நாள் வேலையையும் வருமானத்தையும் இழந்து ரேஷன் பொருட்களை வாங்க வேண்டிய சூழ்நிலை உள்ளது மேலும் வயதானவர்களுக்கு கைரேகை விழாமலும் கருவிழி பதிவாகாமலும் திருப்பி விடுவதன் மூலம் மன உளைச்சலுக்கு ஆளாகின்றனர் அது மட்டும ல்லாமல் கிராமப்புற விவசா யிகள் குறித்த நேரத்தில் ரேஷன் பொருட்களை வாங்க முடியாமல் பாதிக்கப்படுகின்றனர் ஆகவே கைரேகை கருவிழி மூலம் பொருட்கள் வழங்குவதையும் ப்ளூடூத் முறையில் பொருட்கள் எடை போடுவதையும் மாற்றி செல்போன் மூலம் வரும் ஓடிபி மூலம் பொருட்களை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கத்தின் சார்பில் 12/11/2025 புதன் அன்று காலை 10.30 மணிக்கு வடுகபாளையம் ரேஷன் கடை முன்பு மாதர் சங்கத்தின் அவிநாசி ஒன்றிய செயலாளர் எஸ் கௌரிமணி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு ஆர் லதா பி கோமதி ஆர் லட்சுமி கே ராமசாமி சி சின்னச்சாமி வி கலைச்செல்வி உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்

# எஸ்.ஐ.ஆர் ஐ ரத்து செய்யக்கோரி இந்தியா கூட்டணி கட்சி சார்பில் திருப்பூர் குமரன் நினைவகம் முன்பு ஆர்ப்பாட்டம்




திருப்பூர், நவ.13-

தமிழ்நாட்டில் கடந்த 4 ம் தேதி முதல் வாக்காளர்கள் சிறப்புத் தீவிர திருத்த பணிகளை தேர்தல் ஆணையம் மேற்கொண்டு வருகிறது. இதற்கு எதிர்கட்சியினர் பலரும் எதிர்ப்பு தெரி வித்து வருகிறது. அதனை தொடர்ந்து இந்தியா கூட்டணி கட்சிகள் சார்பில் நாடு முழுவதும் போராட்டம் நடத்தி வருகிறது. அதன் ஒரு பகுதியாக திருப்பூரில் இந்தியா கூட்டணி கட்சி சார்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மத்திய மாவட்ட செயலாளர், தெற்கு எம்.எல்.ஏ செல்வராஜ் தலைமை வகித்தார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் வடக்கு மாவட்ட செயலாளரும், மேயருமான தினேஷ்குமார், காங்கிரஸ் கட்சி மாநகர் மாவட்ட தலைவர் கிருஷ்ணன், புறநகர் மாவட்ட தலைவர் கோபி, மதிமுக மாநகர் மாவட்ட செயலாளர் நாகராஜ், மா.கம்யூ மாநில செயற்குழு உறுப்பினர் முத்துக்கண்ணன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் செந்தில்குமார், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் சையது முஸ்தபா, மக்கள் நீதி மைய மகேந்திரன், கொமதேக வடக்கு மாவட்ட செயலாளர் வேலுமணி, விடுதலை சிறுத்தை மாவட்ட செயலாளர் மூர்த்தி, அகில இந்திய பார்வர்டு பிளாக் மாநில பொதுச் செயலாளர் கர்ணன். உள்ளிட்ட பல்வேறு கட்சி தலைவர்கள் கோரிக்கைகளை விளக்கி பேசினர். இந்த ஆர்ப்பாட்டத்தில் மாநகர செயலாளர்கள் தங்கராஜ், டிகேடி மு.நாகராஜ், பகுதி செயலாளர்கள் ராமதாஸ், பி.ஆர். செந்தில்குமார், மின்னல் நாகராஜ், இரண்டாம் மண்டல தலைவர் தம்பி.கோவிந்தராஜ், மாமன்ற உறுப்பினர் செந்தூர் முத்து, தெற்கு மாநகர இளைஞரணி அமைப்பாளர் எம்.எஸ். ஆர்.ராஜ், வர்த்தகரணி அமைப்பாளர் எம்.எஸ். மணி, மாவட்ட மகளிரணி அமைப்பாளர் கலைச்செல்வி உள்ளிட்ட அலர் கலந்துகொண்டனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் எங்கள் வாக்கு எங்கள் உரிமை, தமிழர்களின் வாக்குரிமையை பறிக்காதே, எஸ் ஐ ஆர் ஐ உடனடியாக திரும்ப பெற வேண்டும், வாக்காளர்கள் பட்டியலில் முறைகேடு செய்யாதே, எஸ் ஐ ஆர் ஐ கைவிட வேண்டும், பாஜகவின் கைப்பாவையாக இந்திய தேர்தல் ஆணையம் செயல்படுவதாக குற்றம் சாட்டி கைகளில் பதாகைகளை ஏந்தி முழக்கங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



■ தமிழ்நாடு பள்ளி கல்வித்துறை அமைச்சரும் திருச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி வழிகாட்டுதலின்படி திருச்சி தெற்கு மாவட்டம் திருவெறும்பூர் தொகுதி பொன்மலை பகுதிக்கு உட்பட்ட 44 ஏ வார்டில் பூத் எண் 191ல் என்வாக்குச்சாவடி_வெற்றி வாக்குச்சாவடி ஆலோசனை கூட்டம் திருச்சி கிழக்கு மாநகரக் கழக செயலாளரும், ,மண்டலம் 3 தலைவருமான மு.மதிவாணன் தலைமையில் நடந்தது.இந்நிகழ்வில் பகுதி கழக செயலாளர் கொட்டப்பட்டு இ.எம்.தர்மராஜ் வட்டச் செயலாளர் துரை, வாக்கு சாவடி,மற்றும் பாக முகவர்கள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



■ திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் சட்டமன்ற தொகுதிகுட்பட்ட திருவானைக்காவல் நடுகொண்டையம்பேட்டை பகுதியில் தீ விபத்தால் வீடு சேதமடைந்தது. பாதிக்கப்பட்ட குடும்பத்தினரை நேரில் சந்தித்து ஆறுதல் கூறி நிவாரண உதவிகளை புறநகர் வடக்கு மாவட்ட அதிமுக செயலாளர் முபரஞ்சோதி வழங்கினார். அருகில் பகுதிச் செயலாளர் சுந்தர்ராஜன் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.





■ மதுரை கிராமப்புற மண்டலம், பாலமேடு வட்டார களஞ் சியம் மதுரை அரவிந்த் கண் மருத்துவமனை மூலம் பாலமேடு நாயுடு மஹாலில் இன்று 11.11.2025 செவ்வாய்க் கிழமை இலவச கண் பரிசோதனை முகாம் நடத்தப்பட்டது. இதில் 361 பேருக்கு கண் பரிசோதனை செய்யப்பட்டது. 69 பேர் கண் ஆபரேசனுக்கு தகுதி பெற்றவர்களாக இருந்தனர். 26 பேர் அரவிந்த் கண் மருத்துவ சிகிச்சைக்காக பரிந்துரை செய்தனர். 74 பேர் கண் கண்ணாடி வாங்கி பயனடைந்தனர். அரவிந்த் கண் மருத்துவமனை மருத்துவர்கள் டாக்டர். பிரபு மற்றும் டாக்டர். கேசவன் தலைமையிலான மருத்துவக்குழு வந்திருந்தனர். மதுரை கிராமப்புற மண்டல சுகாதார ஒருங்கிணைப்பாளர் முத்தையா அவர்களின் வழிகாட்டலின்படி பாலமேடு வட்டார களஞ் சிய ஒருங்கிணைப்பாளர்கள் பாலமுருகன் மற்றும் நாகரத்தினம் , பணியாளர்கள் மற்றும் களஞ்சிய நிர்வாக உறுப்பினர்கள் முகாமை ஒருங்கிணைத்து சிறப்பாக நடத்தப்பட்டது.




# முத்தரையர்கள் அதிகார மீட்பு மாநாடு வெற்றி மாநாடாக அமைய பாடுபட வேண்டும் : கே.கே.செல்வகுமார் பேச்சு

திருச்சி, நவ.13-

தமிழர் தேசம் கட்சியின் சார்பில் வருகிற ஜனவரி 25 ந் தேதி திருச்சியில் முத்தரையர்களின் அரசியல் அதிகார மீட்பு மாநாடு நடைபெறுகிறது. இந்த மாநாடு தொடர்பாக அக்கட்சியின் திருச்சி மாவட்ட நிர்வாகிகள் சந்திப்பு கூட்டம் நேற்று (புதன்கிழமை) திருச்சியில் நடந்தது.

தமிழர் தேசம் கட்சியின் தலைவரும் வீர முத்தரையர் முன்னேற்ற சங்க நிறுவனத் தலைவருமான கே கே செல்வகுமார் தலைமை தாங்கினார்.

மாநில பொதுச் செயலாளர் தளவாய் ராஜேஷ், மாநில அமைப்பு செயலாளர் மகுடேஸ்வரன், வீர முத்தரையர் முன்னேற்ற சங்க இளைஞரணி ஒருங்கிணைப்பாளர் துரைகுணசேகரன்,

வீர முத்தரையர் முன்னேற்ற சங்க மாநில அமைப்பாளர் கள்ளிக்குடி எம். ராஜேந்திரன், கட்சியின் மாநகர மாவட்ட செயலாளர் வள்ளல், வழக்கறிஞர் கௌதம் மணி மற்றும் கட்சியின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் கேகே செல்வகுமார் பேசும்போது,

வருகிற ஜனவரி 25ஆம் தேதி திருச்சியில் முத்தரையர் அதிகார மீட்பு மாநாடு நடைபெறுகிறது.

இந்த மாநாடு தமிழகமே திரும்பிப் பார்க்கும் வகையில் வெற்றியின் மாநாடாக அமைய அனைவரும் பாடுபட வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

மேலும் புதிய நிர்வாகிகளை அவர் அறிமுகம் செய்து வைத்தார்.



# அமைச்சர் கே.என்.நேரு பிறந்த நாளை முன்னிட்டு 630 மாணவ, மாணவிகளுக்கு தபால்துறை வைப்பு கணக்கு

திருச்சி, நவ.13-

திருச்சி எடமலைப்பட்டி புதூர் பகுதியில் கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிர்வாக துறை அமைச்சருமான கே என் நேரு பிறந்த நாளை முன்னிட்டு மாநகராட்சி துவக்கப்பள்ளி பயிலும் 630 மாணவ மற்றும் மாணவியர்கள் மேலும் மாநகராட்சி உயர்நிலைப் பள்ளியில் 840 மாணவ மாணவியர்களுக்கும் மற்றும் இன்பன்ட் ஜீசஸ் அரசு உதவி பெறும் பள்ளியில் 1115 மாணவ மாணவியர்களுக்கும் ஆஷா தீபம் சிறப்பு குழந்தைகள் பள்ளியில் பயிலும் 40 மாணவிகளுக்கும் தபால் துறையில் தொடர் வைப்பு கணக்கில் சேர்வதற்கான கணக்கை தொடங்கி வைத்து குழந்தைகளுக்கு இனிப்புகள் வழங்கி மகிழ்வித்தார் நிகழ்ச்சியில் மாநகராட்சி மேயர் அன்பழகன் மாநகராட்சி ஆணையர் மதுபாலன், எடமலைப்பட்டி புதூர் கவுன்சிலர் முத்து செல்வம், கவுன்சிலர் ராமதாஸ் உட்பட மாமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# கண்ணைக் கவரும் அகல் விளக்குகள்: மானாமதுரை கார்த்திகை திருநாளையொட்டி அகல் விளக்கு தயாரிப்பு மும்முரம்

சிவகங்கை, நவ.13-

மானாமதுரை மண்பா ண்டப் பொருட்களுக்கு மிகவும் பிரசித்தி பெற்றது. இங்கு தயாராகும் அகல் விளக்குகள் கலைநயம் மிக்கதாகவும், உறுதியாகவும், சுற்றுப்புற சூழலை பாதிக்காமல் இருப்பதாலும் பலரும் விரும்பி வாங்குகிறார்கள். சீசனுக்கு ஏற்றவாறு மண்பா ண்டப் தொழிலாளர்கள் பொருட்களை தயாரித்து கூட்டுறவு சங்கத்தின் மூலம் விற்பனை செய்கின்றன. டிசம்பர் 3 ஆம் தேதி காத்திகை திருநாள் கொண்டாடப்பட உள்ளதால் மானாமதுரையில் அகல் விளக்குகள் தயாரிப்பு பணியில் ஆண்களும், பெண்களும் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

சாதாரண அகல் விளக்கில் இருந்து. கண்ணை கவரும் கலைநயமிக்க பல்வேறு வடிவங்களில் இன்றைய தலைமுறையினர் விரும்பும் வகைக்கில் விளக்குகள் தயாரிக்கப்படுகின்றன. சாதாரண விளக்குகள் ஒரு ரூபாய் என்றும் கலைநயமிக்க பொருட்கள் அது வேலைப்பாடுகள் ஏற்ப ரூ.500 வரையிலும் விற்பனை செய்யப்படுகிறது. மதுரை, திருச்சி, காரைக்குடி, தேவைக்கோட்டை, புதுக்கோட்டை உள்ளிட்ட பல்வேறு நகரங்களில் இருந்தும் வியாபாரிகள் விளக்குகளை வாங்க வருகை தருகின்றன.

ஒரு ரூபாய் விற்பனை செய்யப்படும் கிளியன்சாட்டி எனப்படும் சிறிய விளக்குகள் நாள்தோறும் 200 விளக்குகள் வரை தயாரிக்கின்றன. மற்ற விளக்குகள் அதன் வேலைப்பாடுகளுக்கு ஏற்ப நாள் ஒன்றுக்கு 4 முதல் 10 வரை தயாரிக்கின்றன. தயாரித்த விளக்குகளை சூளையில் வைத்து சுடப்பட்ட பின் விற்பனைக்கு அனுப்புகின்றன. இயற்கை ஆர்வலர்களும் பலரும் மானாமதுரை அகல் விளக்குகளை பெரிதும் விரும்பி வாங்கிச் செல்கின்றன.

# வெற்றிக் கோப்பை சின்னம் கேட்டு தமிழக வெற்றிக் கழகம் மனு

சென்னை, நவ.13-

ஆட்டோ, கிரிக்கெட் பேட், விசில், வெற்றிக் கோப்பை உள்ளிட்ட சின்னங்களில் ஒரு சின்னத்தை ஒதுக்குமாறு தேர்தல் ஆணையத்தில் தவெக நிர்வாகிகள் மனு அளித்துள்ளனர்.



தமிழக சட்டப்பேரவை தேர்தலுக்கு இன்னும் 6 மாதங்களே இருப்பதால், தமிழக வெற்றிக் கழகம் (தவெக) தலைவர் விஜய் பல்வேறு வியூகங்களை வகுத்து வருகிறார். சமீபத்தில் நடைபெற்ற தவெக பொதுக்குழு கூட்டத்தில் முதல்வர் வேட்பாளர் விஜய் தான் எனவும், கூட்டணி குறித்து முடிவை கட்சியின் தலைவர் விஜய் எடுப்பார் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கரூர் சம்பவத்துக்கு பிறகு அதிமுக பாஜக கூட்டணியில் விஜய் இணைய வாய்ப்புள்ளதாக அரசியல் விமர்சகர்கள் பலர் தெரிவித்து வந்த நிலையில், தவெகவின் பொதுக்குழு தீர்மானம் அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதற்கிடையில், மீண்டும் விஜய் சுற்றுப் பயணம் மேற்கொண்டு மக்களை சந்திப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகிறது. அதற்காக, கட்சியில் பல்வேறு மாற்றங்களை விஜய் செய்து வருகிறார். இந்நிலையில், அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள தமிழக சட்டப்பேரவை தேர்தலில் போட்டியிடவுள்ள தவெக கட்சிக்கு சின்னம் ஒதுக்கக்கோரி, அக்கட்சியின் நிர்வாகிகள் டெல்லியில் உள்ள தேர்தல் ஆணையத்தில் நேற்று மனு அளித்தனர். தவெக கொடுத்துள்ள பொதுவான 10 சின்னங்கள் அடங்கிய பட்டியலில் ஆட்டோ, கிரிக்கெட் பேட், விசில் சின்னம் இடம் பெற்றுள்ளது.

இதுதொடர்பாக தவெக நிர்வாகிகளிடம் கேட்ட போது, "வேட்டைக்காரன் படத்தில் விஜய் ஆட்டோ ஓட்டுவார். பைரவா படத்தில் விஜய் கிரிக்கெட் விளையாடுவார். பிகில் படத்தில் விஜய் கபடி பயிற்சியாளராக விசிலுடன் இருப்பார். அதேபோல் பிகில் படத்தில் 'கப் முக்கியம்' என்று விஜய் சொல்வார். அதனால், வெற்றிக் கோப்பை சின்னமும் கேட்டுள்ளோம். இந்த நான்கு சின்னமும் விஜய்க்கு மிகவும் பிடித்த சின்னமாக உள்ளது. இதில், ஏதாவது ஒரு சின்னம் தேர்தல் ஆணையம் ஒதுக்கினால், சின்னத்தை எளிதாக மக்களிடம் கொண்டு சேர்க்க முடியும்" என்றனர்.

மக்கள் நீதி மய்யம்: இதற்கிடையே, பொது சின்னம் ஒதுக்கக்கோரி மக்கள் நீதி மய்யம் கட்சியும் தேர்தல் ஆணையத்திடம் விண்ணப்பித்துள்ளது.

2026 தமிழக சட்டப்பேரவை தேர்தலில் மக்கள் நீதி மய்யம் சார்பில் போட்டியிட விரும்பும் வேட்பாளர்களுக்காக விருப்பப்பட்ட 10 சின்னங்களின் பட்டியலில் இருந்து ஒரு பொதுச்சின்னத்தை ஒதுக்குமாறு இந்திய தேர்தல் ஆணையத்திடம் மக்கள் நீதி மய்யம் சார்பில் நேற்று விண்ணப்பிக்கப் பட்டுள்ளது. மக்கள் நீதி மய்யம் கட்சியின் பிரதிநிதிகள் டெல்லியில் உள்ள தேர்தல் ஆணைய அலுவலகத்தில் ஆணைய அதிகாரிகளைச் சந்தித்து, விண்ணப்பத்தை அளித்தனர்.

# போலி வாக்காளர்கள் ஓட்டுப் போட்டுத்தான் கொளத்தூரில் ஸ்டாலின் ஜெயித்தாரா? நிர்மலா சீதாராமன் கேள்வி

புதுடெல்லி, நவ.13-

தமிழ்நாட்டில் முதல்வர் ஸ்டாலின் போட்டியிட்ட கொளத்தூர் தொகுதியில் மட்டும் 4,379 போலி வாக்காளர்கள் கண்டறியப்பட்டுள்ளனர் என்று மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார். அவர்கள் ஓட்டுப் போட்டுத்தான் ஸ்டாலின் வெற்றி ஜெயித்தாரா? என்றும் அவர் கேள்வி எழுப்பி உள்ளார்.



பாஜக கோவை கோட்ட அணி பிரிவுகள், மாநில மற்றும் மாவட்ட நிர்வாகிகள் கூட்டம் கோவையில் நேற்று நடந்தது. மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தலைமை வகித்தார். மாநில தலைவர் நயினார் நாகேந்திரன், தேசிய மகளிர் அணி தலைவர் வானதி சீனிவாசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தொடர்ந்து செய்தியாளர்களிடம் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் கூறியதாவது: ஜிஎஸ்டி வரி மாற்றம் செய்யப்பட்டதால் பல்வேறு பொருட்களின் விலை குறைந்துள்ளது. தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் சார்பில் நடத்தப்படும் பாராட்டு விழாவில் கலந்து கொள்ள கோவை வந்துள்ளேன். தமிழ்நாடு முழுவதும் 'எஸ்ஐஆர்' பணிகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து திமுக போராட்டம் நடத்துவது ஆச்சரியம் அளிக்கிறது. இந்நடவடிக்கையை பாஜக கொண்டு வந்தது போல் திமுகவினர் பேசுகின்றனர். கடந்த 1952ம் ஆண்டு முதல் 13 முறை 'எஸ்ஐஆர்' நடைபெற்றுள்ளது. அப்போது காங்கிரஸ் கூட்டணியில் இருந்த திமுக எதுவும் செய்யாமல், தற்போது மட்டும் ஏன் போராட்டம் நடத்துகிறது. முதல்வர் ஸ்டாலின் என்ன சொல்கிறோம் என புரியாமல் ஒரு வீடியோ வெளியிட்டுள்ளார். துணை முதல்வர் உதயநிதி 'எஸ்ஐஆர்' என்றால் என்ன என தெரியாமல் 'ரிவிஷன் 'என்பதை 'ரெஸ்ட்ரிக் ஷன்' என சொல்கிறார்.

தங்களின் ஆட்சியின் தோல்விகளை மறைக்க திமுக இது போன்ற நிலைப்பாட்டை எடுத்து வருகிறது. எதிர்க்கட்சிகளோ, பாஜகவோ வெற்றி பெற்றால் 'இவிஎம்' இயந்திரங்கள் மீது குற்றம்சாட்டுகின்றனர். திமுக வெற்றி பெறும் போது எதுவும் எதிர்த்து பேசுவதில்லை. பிஹாரில் தேர்தல் நடைபெறும் நிலையில், ராகுல் காந்தி ஹரியானாவில் வாக்கு திருட்டு நடந்துள்ளது என பேசுகிறார். தமிழ்நாட்டில் கொளத்தூர் தொகுதியில் மட்டும் 4,379 போலி வாக்காளர்கள் கண்டறியப்பட்டுள்ளனர். ஒரே பெயர், ஒரே சொந்தக்காரர்கள் பெயர், ஒரே வயது. இருப்பினும் அட்டை எண்கள் மட்டும் வேறு. 933 வாக்காளர்கள் போலி முகவரியில் உள்ளனர். இதுபோன்ற முறைகேடுகளை நீக்க வேண்டாமா. கொளத்தூர் தொகுதியில் இத்தகைய முறைகேடுகளால் தான் ஸ்டாலின் வெற்றி பெற்றாரா என நாங்கள் கேட்கலாமா.

தற்போது கண்டறியப்பட்டுள்ள முறைகேடுகளை நீக்க வேண்டாமா. பிஹாரில் 22 லட்சம் வாக்காளர்கள் இறந்தவர்கள். இருப்பினும் வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ளனர். 7 லட்சம் வாக்காளர்கள் ஒரு இடத்தில் மட்டுமின்றி மேலும் வேறு இடத்திலும் பெயர் பதிவு செய்துள்ளனர். 35 லட்சம் பேர் நிரந்தரமாக பிஹாரை விட்டு வெளியேறி விட்டோம் என கூறியுள்ளனர். பிஹாரில் மட்டும் 64 லட்சம் பேரின் பெயர் வாக்காளர் பட்டியலில் இருக்க கூடாது. அதற்குதான் தேர்தல் ஆணையம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இரண்டாவது கட்டமாக தேர்தல் ஆணையம் 9 மாநிலங்கள் மற்றும் 3 யூனியன் பிரதேசங்களில் 'எஸ்ஐஆர்' பணிகளை மேற்கொள்ள உள்ளது. இந்திய அரசியலமைப்பு சட்டத்திலும் தேர்தல் ஆணையத்திற்கு இந்த அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இந்திய ஏற்றுமதியாளர்கள் மீது அமெரிக்க அதிபர் 50 சதவீத வரி விதிப்பு அமலுக்கு வந்து 3 மாதங்கள் கடந்த நிலையில் சலுகை திட்டங்கள் அறிவிப்பது தொடர்பாக தொழில் துறையினருடன் பேசி வருகிறோம். விரைவில் அறிவிப்பு வெளியிடப்படும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.



# பத்மாவதி தாயார் கோயிலில் ஆழ்வார் திருமஞ்சனம்

திருப்பதி, நவ.13-

ஆண்டு தோறும் கார்த்திகை மாதத்தில் திருச்சானூர் பத்மாவதி தாயார் கோயிலில் பிரம்மோற்சவம் நடைபெறுவது ஐதீகம். இந்த ஆண்டும், வரும் 17ம் தேதி கொடியேற்றத்துடன் தாயார் கோயில் பிரம்மோற்சவம் வெகு விமரிசையாக தொடங்கப்பட உள்ளது.

தொடர்ந்து 9 நாட்கள் வரை, அதாவது நவம்பர் மாதம் 25ம் தேதி வரை பத்மாவதி தாயார் தினமும் காலை, இரவு என இரு வேளைகளிலும் பல்வேறு

வாகனங்களில் மாட வீதிகளில் பவனி வந்து பக்தர்களுக்கு அருள் பாலிக்க உள்ளார். இதனையொட்டி, நேற்று வைகானச ஆகம விதிகளின்படி, கோயில் முழுவதும் மஞ்சள், குங்குமம், சந்தனம், பச்சை கற்பூரம், பன்னீர் போன்றவற்றால் கருவறை உட்பட உப சன்னதிகள், கொடிக்கம்பம், பலிபீடம், விமான கோபுரம் என அனைத்து இடங்களிலும் அதிகாரிகள், அர்ச்சகர்கள், ஆகம வல்லுனர்கள் கோயிலை சுத்தம் செய்தனர். அதன் பின்னர் நைவேத்தியம் படைத்தனர். இதனை தொடர்ந்து பக்தர்கள் மதியம் 12 மணிக்கு மேல் தாயாரை தரிசனம் செய்ய அனுமதித்தனர்.

இந்நிலையில், திருப்பதி தேவஸ்தான நிர்வாக அதிகாரி அனில் குமார் சிங்கா,திருப்பதி மாவட்ட ஆட்சியர் வெங்கடேஸ்வர், எஸ்பி சுப்புராயுடு உட்பட பலர் பிரம்மோற்சவஏற்பாடுகளை நேற்று திருச்சானூரில் பார்வையிட்டனர்.



# நவ.22ல் பணகுடி அருகே நாதக சார்பில் மாடு மேய்க்கும் போராட்டம்

சென்னை, நவ.13-

நெல்லை மாவட்டம் பணகுடி அருகேயுள்ள மகேந்திரகிரி மலையில் தடையை மீறி வரும் 22ம் தேதி மாடு மேய்க்கும் போராட்டம் நடைபெற உள்ளதாக நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் அறிவித்துள்ளார்.

மேலும், அதே பகுதியில் வன உரிமை கிராம சபை அறிவிப்பு பதாகையையும் அவர் திறந்துவைப்பார் என்று நாதக நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

# கலப்பட நெய் விவகாரத்தில் திருப்பதி தேவஸ்தான முன்னாள் அதிகாரி தர்மா ரெட்டியிடம் விசாரணை

திருப்பதி, நவ.13-

திருமலை திருப்பதி தேவஸ்தானத்தில் ஜெகன் மோகன் ரெட்டியின் ஆட்சிக் காலத்தில், டெண்டர் மூலம் கலப்பட நெய் வாங்கியது தொடர்பாக சிபிஐ தலைமையிலான சிறப்பு விசாரணை குழு விசாரணை நடத்தி வருகிறது.



உத்தராகண்ட் மாநிலத்தில் உள்ள போலேபாபா ஆர்கானிக் டெய்ரி நிறுவனத்திற்கு ஒப்புதல் கொடுக்கப்பட்டு அவர்கள் ரூ.250 கோடிக்கு 68 லட்சம் கிலோ நெய்யை விநியோகம் செய்ய வேண்டும். ஆனால், 2022ல் இவர்கள் விநியோகம் செய்த நெய் தரமற்றதாக உள்ளதாக அப்போதைய அறங்காவல் குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அவர்களை பிளாக் லிஸ்டில் வைத்தாலும், ஒரு லிட்டர் பால் கூட தயாரிக்காத இதே நிறுவனம் தொடர்ந்து 2024 ஜூன் மாதம் வரை கலப்பட நெய்யை விநியோகம் செய்துள்ளது.

இதுதொடர்பாக திண்டுக்கல் ஏஆர் டெய்ரி, திருப்பதி வைஷ்ணவி டெய்ரி, உத்தர பிரதேசத்தில் உள்ள மால் கங்கா டெய்ரி ஆகியோரிடமும் சிறப்பு ஆய்வு குழு விசாரணை நடத்தி பலரை கைது செய்துள்ளது.

இந்நிலையில், அந்த கால கட்டத்தில் நிர்வாக அதிகாரியாக கோலோச்சிய தர்மாரெட்டியை நேற்று சிறப்பு ஆய்வு குழு திருப்பதியில் உள்ள அலுவலகத்தில் வைத்து விசாரணை நடத்தியது. நெய்யின் தரத்தை எவ்வாறு ஆய்வு செய்தீர்கள்? போலே பாபா டெய்ரி நிறுவனத்தை பிளாக் லிஸ்டில் வைத்த பின்னரும் எப்படி அவர்கள் மூலமாகவே நெய் விநியோகம் ஆனது? பக்தர்கள் தொடர்ந்து லட்டு பிரசாதம் குறித்து குற்றச்சாட்டுகளை முன் வைத்தும் ஏன் அவற்றின் மீது நடவடிக்கை எடுக்கவில்லை? என்பது போன்ற பல கேள்விகள் தர்மா ரெட்டியிடம் கேட்கப்பட்டதாக தெரிகிறது.

# அரியலூர் அருகே பள்ளத்தில் லாரி கவிழ்ந்து விபத்து: சமையல் காஸ் சிலிண்டர்கள் வெடித்து சிதறின

அரியலூர், நவ.13-

அரியலூர் அருகே காஸ் சிலிண்டர் ஏற்றி வந்த லாரி நேற்று சாலையோர பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துள்ளானது. அப்போது, சமையல் காஸ் சிலிண்டர்கள் வெடித்துச் சிதறியதால் பரபரப்பு ஏற்பட்டது. திருச்சியில் இருந்து சமையல் காஸ் சிலிண்டர்களை ஏற்றிக்கொண்டு லாரி ஒன்று நேற்று முன்தினம் இரவு அரியலூருக்குப் புறப்பட்டது. திருச்சி இனாம்குளத்தூர் பகுதியை சேர்ந்த கனகராஜ்(34) லாரியை ஓட்டினார்.



நேற்று காலை 6.40 மணியளவில் வாரணவாசியை அடுத்த விநாயகர் கோயில் வளைவில் திரும்பியபோது, திடீரென ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்த லாரி சாலையோர பள்ளத்தில் கவிழ்ந்தது. இதில், சிலிண்டர்கள் ஒன்றோடு ஒன்று உரசியதால் தீப்பற்றி எரியத் தொடங்கி, வெடித்துச் சிதறின. ஓட்டுநர் கனகராஜ் காயத்துடன் அங்கிருந்து தப்பினார்.

தகவலறிந்து வந்த அரியலூர் தீயணைப்பு வீரர்கள் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர். கூடுதலாக திருமானூர், பெரம்பலூர், செந்துறை மற்றும் ஜெயங்கொண்டம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்தும் தீயணைப்பு வாகனங்கள் வரவழைக்கப்பட்டன. சுமார் 3 மணி நேரத்துக்கு பிறகு தீ அணைக்கப்பட்டு கட்டுக்குள் கொண்டுவரப் பட்டது.

லாரியில் இருந்த 350 சிலிண்டர்களில் 100க்கும் மேற்பட்ட சிலிண்டர்கள் வெடித்துச் சிதறின. இவற்றின் சப்தம் பல கி.மீ. தொலைவுக்கு கேட்டது. 500 மீட்டர் தூரத்துக்கு சிலிண்டர்கள் தூக்கி வீசப்பட்டன.

சிலிண்டர்கள் வெடித்து சிதறியபோது 30 அடி உயரத்துக்கு மேல் தீ ஜூவாலை எழும்பியது. மேலும், அப்பகுதி முழுவதும் 50 அடி உயரத்துக்கு கரும்புகை காணப்பட்டது. இந்த விபத்து காரணமாக திருச்சிஅரியலூர் சாலையில் 3 மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

# டெல்லி குண்டுவெடிப்பு சம்பவத்தால் கலைந்து போன 5 பேரின் குடும்பக் கனவுகள்

புதுடெல்லி, நவ.13-

டெல்லி செங்கோட்டை அருகே நேற்று முன்தினம் நடந்த கார் வெடிப்பு சம்பவம் நாடு முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. கார் வெடித்ததில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 13ஆக உயர்ந்துள்ளது. மேலும் படுகாயமடைந்த 20க்கும் மேற்பட்டோர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.



இந்த குண்டுவெடிப்பு சம்பவத்தில் இறந்த 5 ஆண்களைச் சேர்ந்த 5 குடும்பங்களின் எதிர்காலக் கனவுகள் கலைந்து போய்விட்டது. இறந்தவர்களில் பிஹாரை சேர்ந்த கார் டிரைவர் பங்கஜ் சைனியும்(22) ஒருவர். இவர் சாந்தினி சவுக் பகுதியில் ஒரு பயணியை இறக்கிவிட்டு வரும்போது இந்த குண்டுவெடிப்பில் சிக்கி உயிரிழந்தார். பங்கஜ் சைனியின் தந்தை இதுகுறித்து கூறும்போது, "பயணியை இறக்கிவிட்டு பங்கஜ் தனது காரில் வரும்போதுதான் இந்த குண்டுவெடிப்பு நடந்துள்ளது. எங்கள் குடும்பத்தின் ஒரே நம்பிக்கை பங்கஜ்தான். அவரை இழந்து எங்களால் இருக்கவே முடியாது. இந்த சம்பவத்துக்கு நீதி கிடைக்கவேண்டும்'' என்றார்.

டெல்லி போக்குவரத்துக் கழகத்தில் பேருந்து நடத்துநராக இருந்த அசோக் குமார் என்பவரும் இதில் உயிரிழந்தார். இதுகுறித்து அசோக் குமாரின் உறவினர் பப்பு என்பவர் கூறும்போது, "8 பேர் கொண்ட குடும்பத்தில் இவர் மட்டுமே ஊதியம் ஈட்டுகிறார். இனி அந்தக் குடும்பத்துக்கு யார் தான் பாதுகாப்பு? தனது குடும்ப பாரத்தை தனியாக சுமந்தவர் அசோக் குமார். இவரது தாயார் சோம்வதி, தனது மூத்த மகனுடன் சொந்த ஊரில் வசிக்கிறார். ஊதியம் போதாததால் இரவு நேரத்தில் செக்யூரிட்டியாகவும் பணியாற்றி வந்தார் அசோக் குமார். அவர்களது எதிர்காலம் இனி கேள்விக்குறிதான்'' என்றார்.

22 வயதான நோமன் என்பவரும் இந்த குண்டுவெடிப்பில் தனது உயிரை பறிகொடுத்துள்ளார். இவர் சாந்தினி சவுக் பகுதியில் அழகு சாதனப் பொருட்களை தனது கடைக்காக வாங்க வந்தபோதுதான் குண்டுவெடிப்பில் சிக்கி உயிரிழந்தார். நோமனின் மாமா ஃபர்ஹான் கூறும்போது, "நோமனின் உயிரிழப்பு அவரது குடும்பத்தைச் சிதைத்துவிட்டது. எங்கள் மகனை இழந்துவிட்டோம். அவர் கடின உழைப்பாளி. இந்த விஷயத்தில் அரசு ஏதாவது செய்ய வேண்டும். ஆனால், இந்த விஷயத்தில் நடவடிக்கை எடுக்க அவர்களுக்கு தைரியம் இல்லை'' என்றார்

இந்த சம்பவத்தில் 34 வயதான மருந்துக் கடை உரிமையாளர் அமர் கட்டாரியாவும் உயிரிழந்துவிட்டார். சம்பவம் அறிந்ததும் அவரது தந்தை,

லோக் நாயக் மருத்துவமனை வாயிலில் கதறி அழுதது பார்ப்போர் நெஞ்சை உருக வைத்தது. மருந்துக் கடையிலிருந்து அமர் கட்டாரியா வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்த போது இந்த சம்பவம் நடந்துள்ளது. அமர் கட்டாரியா தான் அவரது வீட்டுக்காக உழைத்து வந்த ஒரே நபர் என்பது குறிப்பிடத்தக்கது.

உத்தர பிரதேச மாநிலம் ஷ்ராவஸ்தி பகுதியைச் சேர்ந்த தினேஷ் குமார் மிஸ்ராவும் உயிரிழந்தவர்களில் ஒருவர். திருமண அழைப்பிதழ் விற்பனை செய்யும் கடையில் அவர் பணியாற்றி வந்தார். அவருக்கு மனைவி, 3 குழந்தைகள் உள்ளனர். இதுகுறித்து அவரது மனைவி ரீனா கூறும்போது, "என் கணவர் உயிரிழந்ததால் நாங்கள் அனைத்தையும் இழந்துவிட்டோம். எங்கள் வாழ்க்கை போய்விட்டது. இந்த செய்தியை டி.வி.யில் பார்த்ததும் எனது கணவரின் தந்தை புரே, எனக்குத் தகவல் தெரிவித்தார். நான் தினேஷுக்கு போன் செய்தபோது அவர் எடுக்கவில்லை. பின்னர் தான் இந்த சம்பவத்தில் அவர் உயிரிழந்ததை அறிந்துகொண்டேன்'' என்றார்.

# டெல்லி குண்டுவெடிப்பு - நிலநடுக்கம் போல உணர்ந்தோம்: உள்ளூர் மக்கள் தகவல்

புதுடெல்லி, நவ.13-

டெல்லியில் கார் வெடிப்பு சம்பவத்தின்போது நிலநடுக்கம் ஏற்பட்டது போன்ற பயங்கர அதிர்வை உணர்ந்ததாக அங்கிருந்த பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து சாந்தினி சவுக் பகுதியில் பேக் விற்பனை செய்யும் கரம்ஜோத் கூறுகையில், "செங்கோட்டை பகுதியிலிருந்து பலர் என்னை நோக்கி வேகமாக ஓடிவந்தனர். ஒவ்வொருவரின் முகத்திலும் பீதி தெரிந்தது. நானும் பாதுகாப்புக்காக குருத்வாராவை நோக்கி ஓடி உயிர்தப்பினேன்'' என்றார்.

இந்த சம்பவத்தை கண்ணால் பார்த்த ஜெயின் மந்திர் அருகே வசிக்கும் 45 வயதான கர்மயதா தேவி கூறுகையில், "பூமி குலுங்கியது. நிலநடுக்கம் வந்தது போல் உணர்ந்தேன். என்னுடைய 15 வயது மகன் கார் வெடிப்பில் சிதறிய உடல்களை கண்டு பதறினான். உடலின் சில துண்டுகள் ஜெயின் மந்திர் காம்பவுண்டுவுக்குள் வந்து விழுந்தது'' என்றார்.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000